Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பழந்தமிழரும் கட்டிடக் கலையும்

முனைவர் கே.இரா. கமலா முருகன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
இராணிமேரி கல்லூரி (தன்னாட்சி), சென்னை – 600 004.
kamalamurugan_tamil@queenmaryscollee.edu.in

97

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்களின் மாண்புடைய வாழ்வியலில் கட்டிடக் கலை என்பது ஒரு சிறப்பான நுண்ணறிவுத் திறனுடையதான செயல்பாடுகளோடு அமைந்துள்ளது என்பதனை இலக்கியங்கள் வழியாக கண்டுணர்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.

உலகில் பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதாகவே மாபெரும் கலையுணர்வுடையவர்களாகவும், பண்பாட்டில் சிறந்தவர்களாகவும் வாழ்ந்த மனித இனத்தில் தமிழர்களே தன்னிகரற்ற பெருமையுடைவர்களாகத் திகழ்கின்றனர் என்பதும் வெறும் வார்த்தைகள் அல்ல. அவை மாபெரும் தமிழ் ஆவணங்களின்வழி அறியலாகும் உயர் வாழ்வியல் முறையாகும். அவ்வகையில் பழந்தமிழ் இலக்கியங்கள் சுட்டும் கட்டிடக் கலை தொடர்பான சிந்தனைகளை எடுத்துணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**கலையுணர்வில் வல்ல தமிழர்கள்**

***"ஆயக்கலைகள் அறுபத்து நான்கினையும்***
***ஏய உணர்விக்கும் என்னம்மை"***

என்று கலைமகளைப் போற்றுகின்றதன் மூலம் பல்வேறு கலைகளில் வல்லவர்களாகத் தமிழர்கள் வாழ்ந்துள்ளமையினை நாம் உணர முடிகின்றது.

மயிலை. சீனி. வேங்கடசாமி "மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம். உழவு, வாணிபம், நெசவு, மருத்துவம் முதலிய யாவும் கலைகளே. பண்டைக் காலத்தில் நமது நாட்டில் அறுபத்து நான்கு கலைகள் இருந்தன என்று மணிமேகலை முதலான நூல்கள் கூறுகின்றன" (தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 5) என்று அறிமுகம் செய்கின்றார்.

இன்று நாம் தொழில்கள், கலைகள் என்று நுட்பத்தின் அடிப்படையில் பிரித்து உணர சிலவற்றை பகுத்துள்ளோம். அவ்வகையில் கட்டிடக் கலையும் நுட்பங்களால் நிறைந்தமைகின்றது. அழகுக் கலைகளுள் கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் தருவதாக அமைகின்றது.

மயிலை. சீனி. வேங்கடசாமி அவர்கள் தம் நூலில், "அழகுக் கலைகள் எத்தனை? அழகுக் கலைகள் ஐந்து. அவை கட்டிடக் கலை, சிற்பக் கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பனவாகும். பண்டைக் காலத்தில் நமது நாட்டவர் கட்டிடக் கலையினையும் சிற்பக் கலையையும்

வழங்கினார்கள் எனினும் கட்டிடக் கலை வேறு சிற்பக்கலை வேறு" (மேலது, ப. 7) என்றும் தொடர்ந்து அதன் பகுப்பையும் பேசுகின்றமை நல்லதோர் அறிமுகமாக அமைகின்றது.

**இலக்கியங்கள் சுட்டும் கட்டிடக் கலைச் சிந்தனைகள்**

'இலக்கியங்கள் காலத்தின் கண்ணாடி' என்றும் 'கலை கலைக்காகவே', 'கலை வாழ்க்கைக்காகவே' என்றும் பல்வேறு பொன்மொழிகளை நாம் பயன்படுத்தி வருகின்றோம். அவ்வகையில் தமிழரின் பண்பாட்டினையும் பழமையினையும் பறைசாற்றும் வகையில் நம்மிடம் கிடைத்துள்ளவை பதினெண் மேற்கணக்கு நூல்களேயாகும்.

அவ்வகையில் சிறப்புடைய சங்க இலக்கியங்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் தம் கட்டிடக்கலை உணர்வினைச் சுட்டும் பாங்கினை அறிவோம்.

பழந்தமிழர் ஒழுக்கம் சார்ந்த வாழ்வியல் திணை ஒட்டி அமைந்தது. எனவே அங்குள்ள மண்ணியல் மற்றும் கோளியலையும் ஒட்டியே வாழ்வியலும் அமைந்தன. அவ்வகையிலேயே கட்டிடக் கலையும் அமைந்தன எனினும் தேவை கருதி அவற்றைக் கடந்தும் காலத்தைக் கடந்தும் பேசப்படும் புகழுடைய, சிறப்புடைய கட்டிடங்கள் எழுப்பப்பட்டன.

குடிமக்கள் தம் தேவைகளுக்கு ஏற்ப நீள, அகலங்களை உடைய வீடுகளை அமைத்தனர்.

வீடுகள் முற்றம், பெரிய, சிறிய வாயில்கள், பலகட்டுகள், திண்ணை, இடைகழி, மாடங்கள் என்பதான அமைப்புகளுடன் கட்டப்பட்டன என்பதனை,

***"ஏழகத்தகரொடு உகரு முன்றில்***
***குறுந்தொடை நெடும்படிக்கால்***
***கொடுந்திண்ணை பஃறெமுகப்பின்***
***புழைவாயிற் போகிடை கழி***
***மழைதோயும் உயர்மாடத்து"*** (பட்டினப்பாலை, 141-145)

என்று பட்டினப்பாலை சுட்டுகின்றது.

நீண்ட பெரிய மாடங்களுடன் தட்டு ஓடுகளையும் கூரையாகக் கொண்டிருந்த சங்க கால வீடுகளிடையே கூரை வீடுகளையும் உடையவர்களாக மக்கள் வாழ்ந்தனர் என்பதான குறிப்பினை,

***"வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த***
***மஞ்சள் முன்றில் மணநாறு படப்பைத்***
***தண்டலை உழவர் தனிமனை"*** (பெரும்பாணா. 352-355)

என்று பெரும்பாணாற்றுப்படை சுட்டுகின்றது. மேலும் அதே இலக்கியத்தில்,

***"ஈத்திலை வேய்ந்த வெய்ம்புறக் குரம்பை"*** (மேலது, 88)

என்ற காட்சியினையும் நாம் காணமுடிகின்றது. மேலும்,

மூங்கில்கள் சார்த்தி தாழை நாரினால் அவற்றை முறையே கட்டி வைத்து தருப்பைப் புல்லை அதன் மீது கூரையாக அமைத்து வீடுகள் அமைத்த முறையினை மட்டுமின்றி, நம்முடைய

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கிராமங்களில் பாட்டி வீடுகளில் கூரையின் மீது கொடிவகையான தாவரங்களைப் பரவவிட்டு வளர்த்தல் முறையினையும் அன்றே தமிழன் தெளிந்து பயன்கொண்ட பாங்கினையும்,

***“வேழம் நிரைத்து வெண்கோடு விரைஇத்***
***தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த***
***குறியிறைக் குரம்பை”*** (மேலது, ப. 263-265)

என்று பெரும்பாணாற்றுப்படை காட்சிப்படுத்துகின்றது.

குறிஞ்சி நில மக்கள் இத்தகைய முறையில் புல் முதலியவற்றைப் பயன்படுத்திக் கூரை அமைத்து வாழ்ந்தார்கள் என்ற செய்தியினை மலைபடுகடாமும், குறிஞ்சிப்பாட்டும் எடுத்துரைக்கின்றதனை,

***“புல் வேய் குரம்பை”*** (மலைபடு. 435)

என்று மலைபடுகடாமும்,

***“இருவி வேய்ந்த குறுங்காற் குரம்பை”*** (குறிஞ்சிப். 153)

என்று குறிஞ்சிப்பாட்டும் சுட்டுகின்றன.

அகலமாகவும், உயரமாகவும் பல வீடுகள் அமைக்கப்பட்டிருந்ததான காட்சிப்பதிவுகளை,

***“குறும்பல் குழுவின் குன்று கண்டன்ன***
***பகுத்திருந்து உகக்கும் பன்மா ணல்லில்”***

(மதுரைக். 501-502)

என்று மதுரைக்காஞ்சியும்,

***“வான முன்றிய மதலை போல***
***ஏணி சாத்திய வேற்றருஞ் சென்னி***
***விண்பொர நிவந்த வேயா மாடத்து”*** (பெரும்பா. 346-348)

என்று பெரும்பாணாற்றுப்படையும் சுட்டும் அடிகளில் கண்டுணர முடிகின்றது.

வேனில் காலத்தின் தென்றலைத் தழுவிக் கொள்ளும் வகையில் வீடுகளில் நேர்வாய்க் கட்டளைகள் அமைத்துக் கொண்ட தமிழரின் அறிவு நுட்பம்,

**“மேனிலை மருங்கின்**
**வேனிற்பள்ளித் தென்வளி தரூஉம்**
**நேர்வாய்க் கட்டளை திரியாது”** (நெடுநல். 60-62)

என்று நெடுநல்வாடை எடுத்துரைக்கின்றது. குறிப்பாக நெடுநல்வாடை நூலில் வாடைக்காற்றின் துன்பத்தினையும் பேசும் வகையிலான இலக்கியப் போக்கு அமைந்த காரணத்தினால் இச்செய்தி கூடுதல் சிறப்பாக அமைகின்றது.

மதுரைக் கலம்பகம்,

***“சில்காள் றிசைக்கும் பல்புழை நல்லில்”***

(மதுரைக் கலம்பகம், 358)

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

என்ற அடியில் காற்றினையே கட்டுப்படுத்தி அளிக்கும் தன்மையுடைய சன்னல்கள் தமிழர்கள் அமைத்தமைக்கு சான்று பகர்கின்றன. சங்க இலக்கிய காலச் சூழலை ஒட்டி எழுந்த சிலப்பதிகாரம்,

***"மான்கட் காலதர்***
***மாளிகை இடங்களும்"*** (சிலம்பு, 8)

என்று எடுத்துரைக்கின்றது.

நிலா முற்றங்கள் மேல் மாடியிலும் வாசலிலும் அமைத்து மக்கள் பயன்படுத்தி மகிழ்ந்த சூழல்களையும் பந்தல்கள் நிழலுக்காக, ஓய்வுக்காக அமைத்தமையினையும் நாம் சங்கப் பாடலடிகளில் பதிவு செய்துள்ளனர்.

***"நிலைநிலை மாடத் தாமியந் தோறும்"*** (மதுரைக். 451)

என்று மதுரைக்காஞ்சியும்,

***"நிலவும் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றம்"***
(நெடுநல்., 95)

என்று நெடுநல்வாடையும் காட்சிப்படுத்துகின்றன நிலா முற்றங்களை.

நகரங்களைக் காக்கும் வகையில் பெரிய சுவர்களை அமைத்து 'இஞ்சி' என்று வழங்கிய செய்தியினை,

***"சுடுமண் ஓங்கிய நெடுநகர்"*** (பெரும்பா. 405)

என்று பெரும்பாணாற்றுப்படை காட்டுகின்றது.

இத்தகைய அழகிய மாளிகைகளை அமைத்துள்ளமை என்பதான கட்டிடக்கலை நுட்பங்களை உடையதாக அமைந்தமைக்கு நன்று அக்கலையினை கற்றுணர்ந்த சான்றோர் அச்செயலை செய்தனர் என்பதனை,

***"நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டு***
***தேஎம் கொண்டு தெய்வம் நோக்கி"*** (நெடுநல். 76-77)

என்று நெடுநல்வாடையின் அடிகளால் உணர முடிகின்றது.

**நிறைவுரை**

***"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி***
***இருந்ததும் இந்நாடே - அதன்***
***முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து***
***முடிந்ததும் இந்நாடே - அவர்***
***சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து***
***சிறந்ததும் இந்நாடே…."***

என்ற பாரதியின் பெருமிதம் நாமும் பழந்தமிழர்தம் கட்டிடக் கலையின் பயன்பாட்டினைக் கண்டு வியந்து போற்றலாம்!

**உதவிய நூல்கள்**

குறிஞ்சிப்பாட்டு
சிலப்பதிகாரம்
தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
நெடுநல்வாடை
பட்டினப்பாலை
பெரும் பாணாற்றுப்படை
பொருநராற்றுப்படை
மதுரைக் காஞ்சி
மலைபடுகடாம்

பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்
உ. வெ, சாமிநாதய்யர் நூல் நிலையம்
திருவான்மியூர் 1974

தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்
மயிலை சீனி வேங்கடசாமி
முல்லை நிலையம் சென்னை
2014

சிலப்பதிகாரம்
புலியூர் கேசிகன் உரை
பாரி நிலையம்
சென்னை 2020